**03.09.2025**

**அ.வ.எண். 820/2017**

**வா.சா.1 - துரைராஜ், த/பெ. கே.எஸ்.கந்தசாமி**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 03.09.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5 ல் க.ச.எண்.316/2 ற்கு உண்டான செக்குபந்தி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி பௌதீக அமைப்பில் பூமி எதுவும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். க.ச.எண்.316/2 ன் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.90 சென்ட் ஆகும். மேற்படி பூமியில் எங்கள் வகையறாவுக்கு பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். ஏக்கர் 2.90 சென்ட்டில் எனது தாத்தா வகையறாவுக்கு ஏக்கர் 1.90 சென்ட் பாத்தியம் என்றால் சரியல்ல. என் தாத்தாவும், என் தந்தையும், அவர் உடன் பிறந்த சகோதரர்களும் 2001 ம் வருட மே மாதத்தில் க.ச.எண்.316/2 சொத்து குறித்து வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால் சரிதான்.

2. மேற்படி வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் B-அட்டவணை சொத்து என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். B-அட்டவணை சொத்திற்கு தென்புறமா என் தாத்தா சென்னிமலை கவுண்டருக்கு A1-அட்டவணை சொத்தாக ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான், அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்தை தான் 1ம் பிரதிவாதி சுப்பிரமணி செட்டில்மெண்ட் எழுதி வாங்கிவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சுப்பிரமணி ஆவணப்படி அனுபவம் செய்யவில்லை. ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

3. வா.சா.ஆ.1 ஆவணப்படி A1-அட்டவணை சொத்தாக சொல்லியுள்ள செக்குபந்திகள் சரியானது என்றால் ஆமாம். ஆனால் செக்குபந்தி படி 1ம் பிரதிவாதி பூமியை அனுபவம் செய்யவில்லை. என்னுடைய 50 சென்ட் நிலத்தில் 20 சென்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார். A1-அட்டவணை சொத்து பொறுத்து, 1ம் பிரதிவாதி 2014 ம் ஆண்டிலேயே 1ம் வாதியான எனது தகப்பனாருக்கும், அவர்

உடன்பிறந்த மற்றொரு சகோதரரான கே.எஸ்.பழனிச்சாமிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து அவர் தானம் பெற்ற செட்டில்மெண்ட் பத்திரத்தின் நான்கு புற எல்லைகளை நீதிமன்ற ஆணையர் மூலம் நில அளவையர் உதவியுடன் அளந்து அத்து செய்து கற்கள் நட்டு அவருக்கு சாதகமாக தீர்ப்பும், தீர்ப்பாணையும் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கும், இந்த வழக்கும் வேறு, அதன் சொத்து விவரம் மற்றும் இதன் சொத்து விவரம் வேறு. மேற்படி தீர்ப்பின் வரைபடத்தில் உள்ள தெற்குஎல்லையானது முற்றிலுமாக தவறு.

4. அந்த அ.வ.எண்.717/2017 வழக்கில் தாக்கல் செய்த அளவுகள் செக்குபந்தியின் படி இல்லை அது தவறானது. அ.வ.எண்.717/2017 வழக்கின் தீர்ப்பை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கில் பார்த்துகொள்ளலாம் என்று வழக்கறிஞர் சொன்னார். அ.வ.எண்.717/2017 வழக்கில் பெற்ற தீர்ப்பு தற்போது அமலில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து வேறு, இந்த சொத்து வேறு. அ.வ.எண்.717/2017 வழக்கில் பௌதீக அமைப்பு இல்லை என்று என் தகப்பனார் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

5. என் தகப்பனார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை பரிசீலனை செய்து தான் 1ம் பிரதிவாதி அவர் பெற்ற செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் நிலத்தை எல்லைகளாக நிர்ணயம் செய்ய தகுதி உடையவர் என்றும், மேற்படி பத்திரம் செல்லக்கூடியது என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நில அளவையர் மூலமாக 2001 பாகப்பிரிவினை பத்திரத்தை அடிப்படையாக கொண்டு சொத்தை அளக்க வேண்டும் என்று சொல்லியுள்ளோம். 1ம் அயிட்ட சொத்தில், எனது பூமிக்கு தென்புறமாக 1, 2 பிரதிவாதிகளின் பூமி உள்ளதாக சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. நான், 2001 ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலமாக உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். மேற்படி பூமியில் ஏக்கர் 2.90 சென்ட் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து கொடுத்தாரா என்றால் முழு பூமியையும் அளந்தார். ஏக்கர்

2.90 சென்ட் நிலம் இருந்ததை அளந்து அத்து செய்து காண்பித்துள்ளாரா என்றால் அளவீடு சரியாக இல்லை. அளவீடு இல்லாத பத்திரத்தை அடிப்படையாக கொண்டு நான் உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேனோ அந்த ஆவணத்தில் பௌதீக அமைப்பு இல்லை என்று சொல்வது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் நில அளவையரை சொத்தை அளவீடு செய்ய அழைத்து வந்த போது 1ம் பிரதிவாதி ஏற்கனவே சொத்தை அளவீடு செய்து அது சம்மந்தமாக தீர்ப்பாணை பெற்றுள்ளதாக நீதிமன்ற ஆணையரிடம் குறிப்பாணை கொடுத்தார் என்றால் சரிதான்.

7. 3ம் பிரதிவாதி எனது சித்தப்பா பழனிச்சாமியிடன் இருந்து கிரயம் பெற்றவர். எனது சித்தப்பா பழனிச்சாமிக்கு 2001 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் சொத்து பாத்தியப்பட்டது. 3ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அவர் பெயரில் வருவாய் ஆவணங்களை பெயர் மாற்றம் செய்து சொத்தை உட்பிரிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. சொத்தை பார்வையிடும் வரை சொத்து உட்பிரிவு ஆக வில்லை என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 3ம் பிரதிவாதி பழனிச்சாமியிடம் சொத்தை கிரயம் பெற்று 2024 ம் ஆண்டில் உட்பிரிவு செய்துகொண்டார் என்றால் எனக்கு எந்த தகவலும் இல்லை.

8. 3ம் பிரதிவாதி உட்பிரிவு செய்ததை மறைத்து, ஏற்கனவே 1ம் பிரதிவாதி வாங்கிய உத்தரவை மறைத்து நான் எனக்கு சாதகமாக எனது 1ம் அயிட்ட செக்குபந்திக்கு விரோதமாக நில அளவை செய்து, ஆணையாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களின் அடிப்படையில் சிவப்பு வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள க.ச.எண்.316/2A சொத்து தொடர்பாக ஏற்கனவே 1ம் பிரதிவாதி அ.வ.எண்.717/2017 தாக்கல் செய்து அனுபவம் செய்து வரும் நிலத்திற்குள் என்னுடைய இடம் இருப்பதாக நானும், எனது வழக்கறிஞரும் ஆட்சேபணை செய்ததால் மனு சொத்தினை இரு நிறங்களில் நிறமிட்டு கொடுக்க வேண்டும் என்று கேட்டுகொண்டதன் பேரில் இரண்டு நிறங்களில் காட்டப்பட்டுள்ளதாக ஆணையார் அவரது அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

9. 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லும் பகுதியில் கல்லுக்கால் நட்டி சுமார் 10 வருடங்கள் மேலாகிறது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வழக்கு முடியும் வரை எதுவும் செய்யக்கூடாது என சொன்னார்கள். இரவோடு இரவாக கல்லுக்கால் நட்டார்கள் என்றும், நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்பதை காட்ட ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வாய்மொழியாக சொன்னார்கள். 1ம் பிரதிவாதி நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தான் கல்லுக்கால் நட்டார் என்றும், அவ்வாறு கல்லுக்கால் நடும்போது நானும், 1ம் வாதியான எனது தகப்பனாரும், 3ம் வாதியான ஜெயக்குமாருக்கும் என்னுடைய சித்தப்பாவான கே.எஸ்.பழனிச்சாமியும் உடன் இருந்தனர் என்றால் சரியல்ல.

10. அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் வருவதற்கு முன்பாக கல்லுக்கால் இருந்தது. க.ச.எண்.316/2A காலையை பொறுத்து, ஏற்கனவே நில அளவை செய்து சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டு அனுபவித்து வரும் 1ம் பிரதிவாதியின் சொத்துக்குள் பிரவேசிக்க எனக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில், 2ம் அயிட்ட சொத்தானது காலை எண்.310 ல் உள்ளது. தற்போது நிலம் உட்பிரிவாகியுள்ளதா என்றால் தெரியாது.

11. 12 அடி வண்டித்தடம் எங்கிருந்து, யார் காலையின் வழியாக, எந்த திசையின் வழியாக செல்கிறது என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி, காலை எண்.310/2, 310/1 வழியாக செல்கிறது. காலை எண்.310/2 வழியாக வண்டித்தடம் செல்கிறது என்று எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மாமூல் வண்டித்தடம் என சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் யார் யார் எந்த வண்டித்தடத்தின் வழியாக சென்று ஆண்டு அனுபம் செய்ய வேண்டும் என்று குறிப்பாக உள்ளது என்றால் சரிதான். மாமூல் வண்டித்தடம் என உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மாமூல் வண்டித்தடம் என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur